# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு 24.11.2018 (முற்பகல் மற்றும் பிற்பகல்) அன்று நடைபெறுவதாக இருந்த புள்ளியியல் ஆய்வாளர் (Statistical Inspector) பதவிக்கான தேர்வு கஜா புயலால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் தொடர் மழை காரணமாக தேதி குறிப்பிடபடாமல் ஒத்திவைக்கப்பட்டது. அத்தேர்வினை, வருகின்ற 23.12.2018 (முற்பகல் மற்றும் பிற்பகல்) அன்று நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது. இத்தேர்வானது ஏற்கனவே நடத்தப்படவிருந்த சென்னை, மதுரை, கோயம்பதூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய 6 மாவட்டங்களில் நடை பெறும். தேர்வர்கள் புதிய நுழைவு சீட்டினை (Hall Ticket) தேர்வாணைய இனையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளவும்.

மேலும், 23.12.2018 (முற்பகல் மற்றும் பிற்பகல்) அன்று நடைபெறுவதாக தேர்வாணையத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த உதவி நூலகர் மற்றும் இளநிலை கல்வெட்டாளர் (Assistant Librarian in the Government Oriental Manuscripts Library and Research Centre and Junior Epigraphist in Archaeology Department) பதவிகளுக்கான தேர்வினை 26.12.2018 (முற்பகல் மற்றும் பிற்பகல்) அன்று நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது. இத்தேர்வானது ஏற்கனவே நடத்தப்படவிருந்த சென்னை, மதுரை, மற்றும் கோயம்பதூர், ஆகிய 3 மாவட்டங்களில் நடை பெறும். இதற்கான தேர்வுகூட நுழைவுச்சீட்டு விரைவில் வெளியிடப்படும்.

க. நந்தகுமார்
செயலாளர்